

திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரி, இந்திய தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பு (PEFI), ரோட்டரி அமைப்புகளான திருச்சி பட்டர்பிளை, திருச்சி டிசி பிரைடு ஆகியவை இணைந்து மாபெரும் மனிதச் சங்கிலி விழிப்புணர்வு நிகழ்வினை திருச்சிராப்பள்ளி காவிரி மேம்பாலத்தில் அரங்கேற்றினர்கள். தேசியக் கல்லூரியைச் சார்ந்த ஆயிரம் மாணவ – மாணவிகள் பங்கேற்ற இம்மாபெரும் மனிதச் சங்கிலியை தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் தேசியக் கல்லூரியின் பொறுப்பு முதல்வர் முனைவர் முத்துராமகிருஷ்ணன், ரோட்டரி சங்க உறுப்பினர்கள், நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். இந்நிகழ்வினை தேசியக் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் பிரசன்ன பாலாஜி சிறப்பாக ஒருங்கிணைத்தார்.



தஞ்சை மத்திய மாவட்டம், திருவையாறு நகராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பயனாளிகளுக்கு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் நகராட்சி செயலாளர் சி.நாகராஜன், சி.தண்டபாணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

## அமெரிக்காவின் வரி உயர்வால் தமிழ்நாட்டின் பின்னலாடை, தோல், மீன் வளத் தொழில் கடும் பாதிப்பு!

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் பொருளாதார - வெளியுறவுக் கொள்கைகளால் ஏற்பட்ட கடும் நெருக்கடி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.31–

அமெரிக்காவின் வரி உயர்வால் தமிழ்நாட்டின் பின்னலாடை, தோல், மீன் வளத் தொழில் நகரங்களான திருப்பூர், ஆம்பூர்–வாணியம்பாடி, தூத்துக்குடிக்குக் கடும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் பொருளாதார, வெளியுறவுக் கொள்கைகளால் ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடியைப் போக்க, தமிழ்நாடு முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று உரிய நடவடிக்கைகளை, உடனடியாக மேற்கொள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்துவோம் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

**பிற நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்!**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் திடீர் நடவடிக்கைகள் உலகம் முழுக்க பொருளாதாரச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பொருளாதாரத் துறையில் உலகமயம் ஏற்பட்ட பிறகு, 'காட்' ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டு, எதிலும் "உலக மயம் – தாராள மயம் – தனியார் மயம் என்று ஆனதற்குப் பிறகு, எங்கு நடக்கும் பொருளாதார மாற்றங்களும், பிற நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே உண்மை நிலவரமாகும். அதிலும், அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் நாடுகள் மீது டொனால்ட் டிரம்ப் விதித்துள்ள வரி உயர்வுகள் மிகக் கடுமையான பாதிப்பினையும், பல நூறு கோடி இழப்புகளையும் உண்டாக்கியுள்ளன.



அமெரிக்காவின் இந்த திடீர் வரி உயர்வுகளைச் சில நாடுகள் உரிய எதிர் நடவடிக்கைகள் மூலம் எதிர்கொண்டுள்ளன. சில நாடுகள் பணிந்து ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் ஜவுளி ஆடைகள், ரத்தினங்கள், நகைகள், கடல் உணவுகள், தோல்பொருள்கள், அறைகலன்கள், கம்பளங்கள் உள்ளிட்டவற்றுக்கு 50% அளவுக்கு வரியை நிர்ணயித்துள்ளது அமெரிக்கா. இது அமெரிக்காவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்வதில் 66% ஆகும். அது மட்டுமல்லாமல், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2% ஆகும்.

**பொருளாதார ஆய்வாளர்கள் கருத்து!**

பொதுவாக அமெரிக்காவின் இந்தத் திடீர் வரி உயர்வு ஏற்படுத்தியுள்ள தடைப் போன்ற தாக்குதலால், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6% அளவுக்கு குறையும் வாய்ப்பு இருப்பதாகப் பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில், கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ள தொழில்களில் ஒன்று ஜவுளி மற்றும் பின்னலாடைத் தொழில் மிக அதிகம் நடக்கும் திருப்பூர் ஆகும். ஆண்டுதோறும் திருப்பூரிலிருந்து 45,000 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி நடக்கிறது. இதில், 30% பின்னலாடைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி ஆகின்றன. (இது ஒட்டுமொத்த இந்தியப் பின்னலாடை ஏற்றுமதியில் 68% ஆகும்).

இம் மாதத் தொடக்கத்தில் (ஆகஸ்ட் 7) 25% வரியை விதித்து, நேற்று முன்தினம் (ஆகஸ்ட் 27) முதல் அதன் மீது மேலும் 25% (மொத்தம் 50%) வரியை அமெரிக்கா விதித்திருப்பதால், நாளொன்றுக்கு 500 முதல் 700 கோடி ரூபாய் அளவுக்கு நட்டம் ஏற்படும் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி தற்போது திருப்பூர் மீது திணிக்கப்பட்டுள்ளது. திருப்பூரின் தொழில்வளர்ச்சி, வேலை வாய்ப்பு தமிழ்நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கும் வாழ்வளிக்கக் கூடியதாகும். அதையொட்டி, பல சிறு குறு நிறுவனங்கள் அங்கு தொடங்கி நடைபெற்று வருகின்றன.

ஏற்கெனவே நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசின் விசித்திர பொருளாதாரக் கொள்கைகளான பண மதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி. போன்றவற்றால் திருப்பூர் தொழில் முனைவோர் பாதிப்புக்குள்ளாகி, தொழில்கள் முடங்கிப் போயுள்ளன. இந்நிலையில் அடுத்த பெரும் தாக்குதலாக அமெரிக்காவின் வரி விதிப்பு அமைந்திருக்கிறது.

**தோழர் சுப்பராயன் எம்.பி. பிரதமருக்குக் கடிதம்!**

"ரூ.15,000 கோடி தொழில் இழப்பு என்பது, தொழில் இழப்பு மட்டுமல்ல. 2 இலட்சம் தொழிலாளர்களை வேலை இழக்கச் செய்வதுமாகும். பின்னலாடை தொழிலைப் பாதுகாக்க நிதி தொகுப்பை அறிவிக்க வேண்டும். அனைத்து மூலப்பொருள்களுக்கான இறக்குமதி வரியை நிறுத்தி வைக்க வேண்டும். பருத்திக்கு அறிவித்த தற்காலிக இறக்குமதி வரி விலக்கை நிரந்தரமாக்க வேண்டும். ஏற்றுமதியாளர்களுக்கு இலவச மின்சாரம், போக்குவரத்து வசதிகளை வழங்க வேண்டும் என்று திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சுப்பராயன் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், "பின்னலாடைத் தொழிலைப் பாதுகாக்க நிதித் தொகுப்பை அறிவிக்க வேண்டும். அனைத்து மூலப் பொருள்களுக்கான இறக்குமதி வரியை நிறுத்தி வைக்க வேண்டும். பருத்திக்கு அறிவித்த தற்காலிக இறக்குமதி வரி விலக்கை நிரந்தரமாக்க வேண்டும். ஏற்றுமதியாளர்களுக்கு இலவச மின்சாரம், போக்குவரத்து வசதிகளை வழங்க வேண்டும் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அடுத்ததாக, அமெரிக்காவிற்கான இந்தியாவின் தோல் மற்றும் காலணி ஏற்றுமதி 2025 நிதியாண்டில் மொத்தம் 1.2 பில்லியன் டாலராக இருந்தது. இந்தத் துறையில் இந்தியாவின் உலகளாவிய ஏற்றுமதியில் 20% அமெரிக்க ஏற்றுமதியாகும். அதில் முதன்மை இடம் வகிப்பவை தமிழ்நாடும் (ஆம்பூர்–வாணியம்பாடி), உத்தரப் பிரதேச (ஆக்ரா–கான்பூர்) மாநிலங்களும் தான்.

**தற்போது அமெரிக்க வரி உயர்வால் கடும் பாதிப்பு!**

அதே போல, தமிழ்நாட்டில் இருந்து அமெரிக்கா செல்லும் கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியும் பெரிய அளவில் பாதிப்பைச் சந்திக்க உள்ளது. தூத்துக்குடியில் உள்ள 15 நிறுவனங்கள் உள்பட தமிழ்நாட்டில் இருந்து மொத்தம் 25 நிறுவனங்கள் அமெரிக்காவுக்குக் கடல் உணவுகளை அனுப்பும் நிலையில் தற்போது அமெரிக்க வரி உயர்வால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பொதுவாக நம் நாட்டில் இருந்து கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும்போது Anti Dumping Duty 2.65 சதவீதம், CVD எனும் Countervailing Duty 5.77 சதவீதம் உள்ளது. இதனுடன் தற்போது டிரம்பின் 50 சதவீத வரி சேர்ந்துள்ளது. இதனால் கடல் உணவு ஏற்றுமதி மீதான வரி என்பது 58.42 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா செல்லும் கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியைப் பாதிக்கும்.

இந்த மூன்று துறைகள் மட்டுமல்ல, இவற்றைச் சார்ந்துள்ள நகரங்கள், நுகர்வு, தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்தையும் பாதிப்புக்கு உள்ளாக்கும்.

பொருளாதாரத் துறையிலும், வெளியுறவுத் துறையிலும் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசின் தவறான அணுகுமுறைகள் இந்தியா மீது கடும் நெருக்கடிகளை உருவாக்கி வருவதைக் கடந்த 11 ஆண்டுகளாகப் பார்த்து வருகிறோம். அதன் கொடூர பாதிப்புகள் அலை அலையாக வந்து தாக்குகின்றன. இதனால் ஏற்படும் பாதிப்புகள் சமூகத்தின் அனைத்து நிலைகளில் உள்ளோரையும் தாக்கும் அபாயம் கொண்டது.

இச்சூழலை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றி இந்திய ரிசர்வ் வங்கியின் மேனாள் தலைவர் பொருளாதார அறிஞர் ரகுராம் ராஜன் தெரிவித்துள்ள கருத்து ஆழ்ந்து கவனிக்கத்தக்கதாகும். "அமெரிக்கா முதலில் விதித்த 25% வரி என்ற அடிப்படை வரியே (Base Tariff) இரு நாடுகளுக்கிடையிலான உறவு உடைந்துவிட்டது என்பதற்கான அடையாளம் தான். அந்த அடிப்படை வரி 25% என்பதே பிற ஆசிய நாடுகளுக்கு அமெரிக்கா விதித்துள்ள வரியை விட அதிகம். இப்போது அதையும் விட கூடுதலாக 25% அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தியா உள்நாட்டு உற்பத்தியிலும், எந்த ஒரு தனிப்பட்ட நாட்டையும் சார்ந்திராத பல்வேறு உலக நாடுகளுடனும் வர்த்தக உறவை மேம்படுத்த வேண்டும்; குறிப்பாக கிழக்கு நாடுகள், அய்ரோப்பா, ஆப்பிரிக்க நாடுகளில் கவனம் செலுத்த வேண்டும் என்னும் கருத்தை ஒன்றிய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

**ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்!**

இத்தகைய சூழலில் ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்:

1. திருப்பூர் உள்ளிட்ட கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள தொழில் பகுதிகளுக்குத் தேவையான மானியங்களை உடனடியாக அறிவித்து வழங்க வேண்டும். அவர்களின் சுமையில் பெருமளவு குறைய உடனடியாக வகை செய்ய வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சரும், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினரும் விடுத்துள்ள வேண்டுகோள்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2. அமெரிக்காவைச் சார்ந்திருப்பது போன்ற தோற்றத்தைத் தரும் போக்கைக் கைவிட்டு, அய்ரோப்பிய நாடுகளுடனான தொழில் உறவை வளர்த்து, ஏற்றுமதி – இறக்குமதி வர்த்தகத்தை மேம்படுத்த வேண்டும். ஒற்றை நாட்டின் கட்டுப்பாடுகள், திடீரென இந்தியாவின் மீது தாக்கத்தை ஏற்படுத்தாத வண்ணம் திட்டமிட வேண்டும்.

3. பிரதமர் நேருவின் ஆட்சிக் காலத்தில் வகுக்கப்பட்டு, உலக நாடுகள் பலவற்றிற்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்த "அணி சேராக் கொள்கையை" முழுமையாகப் பின்பற்ற வேண்டும். இந்தியாவின் நன்மைக்கும் உலக அமைதிக்கும் எது உகந்ததோ, அதை, அந்தந்த விவகாரத்தில் எடுக்கும் படியான கொள்கை வேண்டும். அமெரிக்கா, ரஷ்யா, ஏன் சீனா உடனான உறவுகளைக் கூட எப்படி அமைய வேண்டும் என்பதைத் துணிவுடன் மறுபரிசீலனை செய்ய வேண்டும். அண்டை நாடுகளை நட்பு நாடுகளாகவே பரிபாலிக்கும் வெளியுறவுக் கொள்கை வேண்டும். உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் சிறு நாடுகளையும், வளரும் நாடுகளையும் வழிநடத்தும் நாடாகத் திகழ வேண்டும். வெற்று விளம்பரப் பயணங்கள் மட்டும் அத்தகைய உறவை வளர்க்காது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள...**

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு மட்டுமல்ல, நாடு முழுவதும் பல்வேறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அதீத நெருக்கடிக்கு, பா.ஜ.க. அரசின் தவறான பொருளாதார, வெளியுறவுக் கொள்கைகளே காரணமாகும். அதைச் சரி செய்ய துணிச்சலான வேகமான நடவடிக்கைகள் தேவை. தமிழ்நாடு முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று, உரிய நடவடிக்கைகளை, உடனடியாக மேற்கொள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்துகிறோம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி அரசின் பல்வேறு சேவைகள் அனைத்து மக்களையும் நேரடியாகச் சென்றடைய, "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்கள் நடைபெற்று வருகிறது. கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி மகாராஜா கடைஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ் கலந்து கொண்டு அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டு உரிய பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார் உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், ஒன்றிய செயலாளர்கள் ரகுநாத், கருணாகரன் உமாபதி, ராஜசேகர், மூர்த்தி, வடிவேல் மற்றும் பல்வேறு அரசுத்துறை அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் சட்டமன்ற தொகுதி, உடையாளூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ. 27 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 2 வகுப்பறை கட்டடத்தை தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாணவ, மாணவிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எஸ்.கே.முத்துச்செல்வன், முன்னாள் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் காயத்ரி அசோக்குமார், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ .சுதாகர், மு.ஊ.ம.தலைவர் யு.எஸ்.ஆர்.லோகநாதன், முன்னாள் கவுன்சிலர் பாண்டியன், மற்றும் டி.என். கரிகாலன், மணிவாசகம், இளங்கோவன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு மாவட்ட மற்றும் மாநகர தி.மு.க. மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - சிவபூசணம் லெனின்தாஸ் 6/43, வ.உ.சி தெரு, அந்திலி, அரகண்டநல்லூர் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605752.

துணைத் தலைவர் - ஏ வசந்தி மெயின் ரோடு, வேலன் நகர், விளந்தை, கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605756.

அமைப்பாளர் - அ. அருள்மொழி 5/101, வைக்காப் தெரு, முட்டத்தூர் (ம) அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605203.

துணை அமைப்பாளர்கள் - 1) டே. மார்த்தாள் 105, மாதா கோவில் தெரு, சித்தேரி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605202. 2) செ. கலையரசி 130, மாரியம்மன் கோவில் தெரு, கருவாட்சி (ம) அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605201. 3) கி. பேபி அம்பேத்கார் வீதி, மேலக்கொந்தை, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605652. 4) கா. சங்கீதா அருமலை நடுத் தெரு, வி. புத்தூர் (ம) அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605755. 5) த. புனிதவதி ஆசனூர் ரோடு, னு.ஆ. ஆஸ்பிட்டல் வளாகம், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605757.

சமூக வலைதள பொறுப்பாளர்கள்- 1) கி. சுமதி மெயின் ரோடு, செம்மார் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 607107. 2) ரா. ஜெயந்தி 19/9, வாணியர் வீதி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605652.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

#### தாம்பரம் மாநகரம்

தலைவர் - ஜி. கலா கணபதிபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை - 600059.

துணைத் தலைவர் - சி. பழனியம்மாள் 12/1, மூகாம்பிகை நகர், முதல் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை - 600045.

அமைப்பாளர் - த. பூங்கோதை 34/57, பெரியார் தெரு, சானடோரியம், சென்னை - 600047.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.கே. கல்யாணி, 2, வேம்புலி அம்மன் கோவில் 4வது தெரு, குளத்து மாநகர், ஜமீன் பல்லாவரம், சென்னை - 600043. 2) கே. செல்வி 8ஏ, பெருமாள் கோயில் தெரு, இரும்புலியூர், மேற்கு தாம்பரம், சென்னை - 600045. 3) அ. லீனால் 7, அண்ணா தெரு, டாக்டர் அம்பேத்கர் நகர், புதுப்பெருங்களத்தூர், சென்னை - 600063. 4) எம். தேன்மொழி 5, கருமாரியம்மன் முதல் குறுக்குத் தெரு, பாரதி நகர், விரிவு பகுதி, வண்டலூர் அஞ்சல், சென்னை - 600048. 5) ந. சரண்யா 5, வ.உ.சி. தெரு, பீர்க்கன்காரணை, சென்னை - 600063.

வலைத்தளப் பொறுப்பாளர்கள் - 1) கே. கல்யாணி 14, ஈஸ்வரன் கோயில் தெரு, பழைய பல்லாவரம், சென்னை - 600117. 2) ஜி. வனஜா 35, வேம்புலியம்மன் கோயில் தெரு, திருநீர்மலை, சென்னை - 600044.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

திருப்பூர் மத்திய மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட திருமதி சுசீலா மறைவெய்திய காரணத்தால், திருமதி கே.ஜானகி (167/3, ராஜாமணி காம்பவுண்ட், ஆத்துதோட்டம், காசிபாளையம், நல்லூர், திருப்பூர்) அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணைத் தலைவராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29-08-2025.

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எஸ். சேகர்

### ஆகஸ்ட் 31 (2020)



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, நகர இளைஞர் அணி அமைப்பாளர், மூன்று முறை குமாரபாளையம் நகரச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

குமாரபாளையம் நகர்மன்ற உறுப்பினராக இரண்டு முறையும், 2006ல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**